# இலக்கிய ஓசை

## இரண்டாம் பருவம்

### தமிழ்த்தாள் - II (20UTL202)


தொகுப்பாசிரியர்

**முனைவர் ந. பிரகாஷ்**

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி - 642001

## இரண்டாம் பருவம் - முன் மாதிரித் தேர்வு

## (உரைநடை, இலக்கிய வரலாறு)

அலகு - 2 கால அளவு 14 3/4) 15 மணி

| வ.எண் | ஆசிரியர் | கட்டுரை | நேரப்பங்கீடு (நிமிடங்கள்) |
|---|---|---|---|
| 1. | முனைவர் ந.ஜெயசுதா | காப்பியங்களில் பெண்கள் | 120 |
| 2. | முனைவர் க.தனலட்சுமி | பொள்ளாச்சி வட்டார ஊரும் பேரும் | 180 |
| 3. | முனைவர் த.கீதாஞ்சலி | ஆனைமலை மாசாணியம்மன் கோயில் வழிபாட்டு முறைகள் | 180 |
| 4. | முனைவர் பே.மஹேஸ்வரி | புதுக்கவிதையில் சுற்றுச்சூழல் | 180 |
| 5. | முனைவர் ஆ.மகாலட்சுமி | கொங்கு நாட்டு வரலாறு | 240 |
| **வ.எண்** | **இலக்கியவரலாறு** | **நூல்வெளியீடு** | **நேரப்பங்கீடு (நிமிடங்கள்)** |
| 1. | சைவம் வளர்த்த தமிழ் | தமிழ் இலக்கிய வரலாறு<br>கா.வாசுதேவன்<br>16 - 43, திருநகர்,<br>“ஐ” பிரிவு,<br>திருச்சிராப்பள்ளி | 60 |
| 2. | வைணவம் வளர்த்த தமிழ் | | 60 |
| 3. | சித்தர்களின் பங்களிப்பு | | 60 |

# 3. ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில் வழிபாட்டு முறைகள்

- முனைவர் த.கீதா

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் இருந்து தென்மேற்கே 24 கி.மீ. தூரத் ஆனைமலையில் சேத்துமடை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மாசாணியம் கோயிலின் நுழைவு வாயில் உள்ளது. அங்கிருந்து உள்ளே சற்றுத் தூரம் சென் உப்பாற்றின் வடகரையில் மாசாணியம்மன் கோயில் உள்ளது. நெடுங்காலமா சிறந்ததொரு பிரார்த்தனைத் தலமாக விளங்கி வருகிற இக்கோயில் மாசாணியம் ஸ்ரீமகாசக்தி, ஆதிபராசக்தியாக கருணை வழங்கி வருகிறாள். இந்தக் கோயில் மய மண்ணில் அமைந்திருப்பதாலும், மூலவரான அருள்மிகு அம்மனும் மயான மண் குடிகொண்டு விளங்குவதாலும் 'மாசாணியம்மன்' எனும் பெயர் அழைப்புப் பெய அமைந்து பின்னர் நிலைபேறாகிவிட்டது. மாசாணியம்மனின் சிறப்புக்குக் காரணம் மூல அமைப்பின் தனித் தன்மையே ஆகும். பொதுவாக மற்ற எல்லாக் கோயில்களி அம்பிகையின் தோற்றம் நின்ற கோலம் அல்லது அமர்ந்த கோலத்தில் இருக்கும். ஆ மாசாணியம்மன் மயான தேவதையாகப் பதினேழு அடி நீளத்தில் பெரிய உருவமாக மே தலைவைத்து, கிழக்கில் கால்களை நீட்டிப்படுத்த கோலத்தில் காட்சி தருகின்றாள்.

**வரலாறு**

மாசாணியம்மன் வரலாறு பற்றி பல்வேறு விதமான கதைகள் கூறப்படுகின் முன்னொரு காலத்தில் விசுவாமித்திரர் என்ற முனிவர் ஒருவர் வாழ்ந்து வந் சத்திரியவம்சமான அரச குடும்பத்தைச் சேர்ந்தவரான அவர் அரசகுடும்ப வாழ்க்கை துறந்து துறவறம் மேற்கொண்டார். துறவியான விசுவாமித்திரர் பல தவங்கள் செ பல்வேறு வரங்களைப் பெற்றார். ராஜரிஷி பட்டம் பெற்ற அவர் ஒருமுறை கடக நாச்சிம என்ற இடத்திற்குச் சென்று மலையின் மேல் அமர்ந்து சிவனை நோக்கி தவம் இ நினைத்தார். ஆனால் கடக நாச்சிமலையில் தாடகை என்ற அரக்கி ஒருத்தி வாழ்ந்து வந் அவள் இலங்கேஸ்வரன் ராவணனின் அபாய சக்திகளைப் பெற்றவள். பல வரங்கள் பெ அதை தீய வழியில் செலுத்தி வந்தாள். அந்த மலையில் விசுவாமித்திரர் தவம் செ முடிக்க அவளால் ஏதேனும் தடை ஏற்படும் என எண்ணினார். ஆதலால் தசர மகன்களான ராமர், லட்சுமணர் இருவரையும் அழைத்து வந்தார். அவர்களும் சம்மதி அரக்கியைச் சமாளிக்க ஈஸ்வரியை வேண்டி வரம் கேட்டனர். அதற்கு ஏற்ப ஈஸ்வரியும் அரக்கியை அழிக்க வழி கூறினார். அரக்கியை அழிக்கப்போகுமுன் மண்ணால் ஈஸ்வரியை வடித்து, பூஜை செய்து வழிபட்டு, அந்த வடிவத்தை அழித்துவிட வேண் என்றார். அதை ஏற்று பூஜைசெய்த ராமர் அந்த வடிவத்தை அழிக்க மறந்து விடுகிற அரக்கியை அழித்தபின் நினைவுவர அந்த வடிவத்தை யாரும் அழிக்க வேண்டாம் என் ராமரே கூறிவிடுகிறார். ஈஸ்வரியின் மறுவடிவமாக உள்ள மாசாணியம்மன், வேண்டுவோர் வேண்டுவன தரும் அன்பு தெய்வமாக, கொங்குநாட்டுக் காவல் தெய்வம் என் அழைக்கப்படுகிறாள். இதேபோல் மற்றொரு வரலாறும் கூறப்படுகிறது.

சங்ககாலத்தில் உம்பற்காடான ஆனைமலைப் பகுதியை நன்னன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். இந்த மன்னன் ஆழியாற்றங்கரையில் இருந்த அரசு தோட்டத்தில் மாமரங்களை வளர்த்து வந்தான். அந்த மாமரத்தின் காய், கனிகளை யாரும் பயன்படுத்தக்கூடாது என்று ஆணையிட்டு இருந்தான். ஒருநாள் இளம் பெண்ணொருத்தி தோழிகளுடன் உப்பாற்றங்கரையில் நீராடிக் கொண்டிருந்தாள். அப்போது ஆற்றங்கரையோரத்தில் இருந்த மாமரத்தில் இருந்து விழுந்த ஒரு மாம்பழம் ஆற்றுநீரில் மிதந்து வந்தது. அரச கட்டளையை அறியாத அந்த இளம்பெண் மாங்கனியை எடுத்துத் தின்றுவிட்டாள். அந்தச் செய்தி அறிந்த மன்னன் அரச கட்டளையை அவமதித்த இளம்பெண்ணுக்கு மரணதண்டனை விதித்து உத்தரவிட்டான். இதற்கு அந்தப் பெண்ணின் தந்தை, தனது மகளின் எடையளவுக்குத் தங்கப் பாவை ஒன்றும், 81 ஆண் யானைகளையும் அபராதமாகத் தருவதாக மன்னனிடம் கெஞ்சினார். மேலும், அந்த இளம்பெண்ணும் 'நான் ஆற்று நீரில் மிதந்து வந்த மாங்கனியைத்தான் எடுத்துத் தின்றேன். மன்னன் உத்தரவை மீறவில்லை' என்று வாதாடினாள். ஆனால் அந்தப் பெண் கூறிய கருத்தை ஏற்காத மன்னன், அந்தப் பெண்ணுக்கு மரணதண்டனை நிறைவேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிட்டான். அதன்படி காவலர்களும் மரண தண்டனையை நிறைவேற்றினர். பின்னர் அந்தப் பெண்ணின் உடல் உப்பாற்றங்கரையில் சமாதிப்படுத்தப்பட்டது. பெண்ணைக் கொலை செய்த மன்னன் நன்னனை கொங்கிளங்கோவர்கள் படையெடுத்துச்சென்று கண்டித்து, அவனது காவல் மாமரத்தையும் வெட்டி வீழ்த்தினர். பெண் சமாதிப்படுத்தப்பட்ட இடத்தில் நாளடைவில் தெய்வீக சக்தி இருப்பதை மக்கள் உணர்ந்தனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் சமாதிமீது, அந்தப் பெண் படுத்திருப்பது போன்ற உருவத்தை மயான மண்ணில் அமைத்து வழிபடத் தொடங்கினார்கள். மயானத்தில் சயனக் கோலத்தில் இருந்த பெண்ணின் உருவம் 'மயான சயனி அம்மன்' என்று அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் பெயர்மருவி மாசாணியம்மன் என்றழைக்கப்பட்டு வருகிறது. இதற்கான சான்று சங்க இலக்கிய குறுந்தொகைப் (292) பாடலில் காணமுடிகிறது. மேலும் இராமபிரான் சீதையை மீட்க இலங்கை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது உப்பாற்றின் வடகரையிலிருந்த மயானத்தில் மண்ணையெடுத்து அதைக்கொண்டு சக்தியுருவம் செய்து, அதை வைத்து ஆகம விதிகளின்படி சக்தி வழிபாடு செய்திருக்கிறார் என்றும் கூறப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மாசாணியம்மன் கோயிலின் வழிபாட்டு நெறிமுறைகள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தாய்த் தெய்வ வழிபாடும் சக்தி வழிபாடும்

"தாய்த்தெய்வ வழிபாடு மிகப் பழமையான வழிபாடு ஆகும். சிந்துவெளி நாகரிகத்தில் தாய்த்தெய்வ வழிபாடு குறித்துப் பல தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. தாய்த்தெய்வ வழிபாடு, காலப்போக்கில் சக்தி வழிபாடாக மாறியது" என்று க.கைலாசபதி குறிப்பிடுகின்றார். தமிழ்நாட்டில் புகழ்பெற்ற சக்தி பீடங்கள் பல உள்ளன. ஆனைமலையில் உள்ள மாசாணியம்மன் திருக்கோயில் புகழ்பெற்ற சக்தி பீடமாக விளங்கி வருகின்றது.

## கோயிலின் அமைப்பு

இக்கோயிலின் ராஜகோபுரம் வடக்கு நோக்கி உள்ளது. கோயிலுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. கருவறையின் கிழக்குப் பக்கத்தில் அம்மன் சுயம்புவாக உள்ளார். பேச்சியம்மனுக்குத் தனி சன்னதி உள்ளது. கோயிலின் காவல் தெய்வமாக கும்ப முனீஸ்வரர் உள்ளார். கோயிலின் வளாகத்தில் துர்க்கை, மகிஷாசுரவர்த்தினி, சப்தமாதர்கள், விநாயகர், கருப்பராயர், புவனேஷ்வரி, பைரவர் ஆகியோர் உள்ளனர்.

**பூசை நடைபெறும் முறைகள்**

அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலில் நான்குகால பூசைகள் நடைபெறு நடைத்திறப்பு காலை 6.00 மணி, காளகந்தி பூசை காலை 6.30 மணி, உச்சிக்கால பூசை ந 11.30 மணி, மாலை பூசை 4.00 மணி, சாயரட்சை பூசை மாலை 6.30 மணி, இராக்கா இரவு 8.00 மணி என நடைபெறுகிறது. காலை, நண்பகல், மாலை ஆகிய நேரங்களில் பூசையும் மாலை 6.30 மணி அளவில் அலங்கார பூசையும் நடைபெறுகிறது. ந பூசையில் பத்து வகையான தீபாராதனை காட்டப்படுகிறது. 108 தங்கத் த மலரைக்கொண்டு அர்ச்சனை செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வார வழிபாடு**

அம்மனை வழிபடுவதற்குச் செவ்வாய், வெள்ளிக் கிழமைகள் உகந்த நாட்க பக்தர்கள் கருதுகின்றனர். இந்நாட்களில் பக்தர்களின் கூட்டம் பெருமளவில் காணப்ப

**மாத வழிபாடு**

மார்கழி மாதம் முப்பது நாட்களும், திருப்பள்ளி எழுச்சி, மாசாணியம்மன் கோ வெகுவிமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. மார்கழி மாதத்தில் காலை நான்கு ம கோயில் நடை திறக்கப்பட்டு, அதிகாலை 6 மணி அளவில் முதல் அபிசேகப் செய்யப்படுகிறது. தை மாதம் பொங்கல் திருவிழாவின்போது மூன்று நாட்க பக்தர்கள் கூட்டமாக வந்து அம்மனை வழிபட்டுச் செல்கின்றனர். திருக்கார்த்திகை தீ போது இத்திருக்கோயிலின் சொக்கப்பானை கொளுத்தும் நிகழ்ச்சியும் நடைமு உள்ளது. பௌர்ணமி அன்று மாலை திருவிளக்கு ஏற்றி வழிபட்டு பெண்கள் அ அந்தாதியிலிருந்து பாடல்களைப் பாடுகின்றனர்.

ஒவ்வொரு மாத அமாவாசை அன்றும் இத்திருக்கோயிலில் சிறப்பு வழ நடைபெறுகிறது. அன்று உச்சிகால பூசையில் சிறப்பு அலங்காரங்களும், தீபாராதனை செய்யப்பட்டு பூசைகள் நடைபெறுகின்றன.

**அபிசேகம்**

மூலவருக்கு அபிசேகம் செய்து வழிபடுவது கிரியை முறைகளில் ம குறிப்பிடத்தக்கதாகும். அம்மனுக்கு பதினாறு வகையான அபிசேகங்கள் செய்யப்படுகி சந்தனம், நல்லெண்ணெய், பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம், தேன், நெய், குங் எலுமிச்சம் பழச்சாறு, கரும்புச்சாறு, பழச்சாறு, பன்னீர், கஸ்தூரி மஞ்சள், பூலாங்கி அரிசி மாவு, திருமஞ்சனம் ஆகியனவும், இப்பொருள்கள் தவிர பக்தர்கள் கொண்டு பிற பொருட்களும் அபிசேகத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**தீர்த்த அபிசேகம்**

ஆனைமலைக்குத் தெற்கே அமைந்துள்ள செம்மணாம்பதி என்ற ஊரில் அருள்மிகு காளியம்மன் கோயிலில் இருந்து தீர்த்தம் கொண்டு வந்து அபி செய்கின்றனர். பக்தர்கள் இத்தீர்த்தத்தினை வீடுகளுக்கு எடுத்துச்சென்று வீட்டினுள் கால்நடைகளுக்கும், வயல்வெளிகளுக்கும் தெளிக்கின்றனர். தீர்த்தத்தி பயன்படுத்தியவர்களை எந்த நோயும் தாக்குவதில்லை என மக்களால் நம்பப்படுகிறது

### ஆடை, அணிகலன்கள்

அம்மன் படுத்த கோலத்தில் காட்சி அளிப்பதால் 4 ½ மீட்டர் அளவுள்ள பட்டுச்சேலை மற்றும் நூல் சேலை அணிவிக்கப்படுகிறது. சிறப்பு நாட்கள் மற்றும் திருவிழா நாட்களில் தங்கக் கவசம் மற்றும் அணிகலன்கள் உற்சவமூர்த்திக்கு அணிவிக்கப்படுகின்றன.

### அர்ச்சனை

இத்திருக்கோயிலில் அர்ச்சனை செய்வது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். வழிபட வருவோர் தங்களின் பெயர், அம்மனின் பெயர், நிறுவனத்தின் பெயர், வாகனங்களின் எண்ணின் பெயரிலும் அர்ச்சனை செய்கின்றார்கள். அம்மனுக்குச் செவ்வந்தி, மல்லிகை, முல்லை, ரோஜா, சம்மங்கி, சாதிப்பூ, நந்தியாவட்டை, செவ்வரளி, வெள்ளை அரளி ஆகியவை பூசை நேரங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இக்கோயிலில் செண்பகமலர் முதன்மை இடம்பெறுகின்றது. இவ்வட்டாரத்திலுள்ள மலைப்பகுதிகளில் செண்பகமலர் மிகுதியாகக் கிடைக்கும் காரணத்தால் பக்தர்கள் பெருமளவில் செண்பகமாலையை சார்த்தி வழிபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### நிவேதனப் பொருட்கள்

மாசாணி அம்மனை வழிபட வருகின்ற பக்தர்கள் வேண்டுதலின் பேரில் வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தேங்காய், பழம், எலுமிச்சம் கனிகள், பலவகையான கனிகள், சுண்டல் போன்றவற்றை அம்மனுக்குப் படையல் செய்கின்றனர்.

### காணிக்கை செலுத்துதல்

இத்திருக்கோயிலில் பக்தர்கள் தங்கள் காணிக்கைகளை உண்டியலில் செலுத்துகின்றனர். மேலும் முடிக்காணிக்கை, பூ முடி செலுத்துதல், குத்துவிளக்கு, நவதானியம், பசுமாடுகள் முதலியவற்றைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

### வழிபாடுகளும் நம்பிக்கைகளும்

இக்கோயிலில் வழிபாடு செய்பவர்களுக்கு பில்லி, சூனியம், மாந்திரீகம், ஏவல்கட்டு போன்றவைகளால் பாதிப்புகள் இருந்தால் அவற்றிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது என்று மக்களால் நம்பப்படுகிறது.

திருமணம் நடைபெறாதவர்களும், குழந்தைப்பேறு இல்லாதவர்களும், உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களும் இக்கோயிலுக்கு வந்து பிரார்த்தனை செய்து செல்கின்றனர். மாசாணியம்மன் கோயிலின் கருவறை எதிரே அம்மனுக்குக் காவல் தெய்வமாக மகாமுனி விளங்கி வருகிறார். மகாமுனி கையில் கத்தியுடனும் உருண்டை விழிகளுடனும் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார். அம்மனை வணங்க வரும் பக்தர்கள் மகாமுனியையும் வணங்கிச் செல்கிறார்கள். குண்டம் திருவிழாவின் போது மகாமுனி பூசை நடத்தப்படுகிறது. அப்போது அருளாளி ஒருவரை இரும்புச் சங்கிலியால் கட்டிக் கோயிலுக்குள் இழுத்து வருவார்கள். ஆவேசத்துடன் வரும் அருளாளி கோயிலைச் சுற்றி வந்து அங்கு படையலாக இடப்பட்டிருக்கும் எள் சாதம், எலுமிச்சம் சாதம், தயிர் சாதம் ஆகியவற்றை உண்பார். மீதி உள்ள எச்சில் சாப்பாட்டைப் பெண் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குவார்கள். இந்த சாப்பாட்டைச் சாப்பிடும் குழந்தையில்லா பெண்களுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இதனால் இந்தச் சாப்பாடு பெண்பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

மகாமுனி உணவு கொடுக்கும்போது யாரும் பார்க்கக்கூடாது என்றும் அந்த உணவு வீசினால் கீழே விழாது என்றும் கூறப்படுகிறது. மேலும் செவ்வாய், வெள்ளி, அமாவா நாட்களில் அம்மன் கையில் சார்த்தப்பட்ட கறுப்பு மற்றும் சிகப்பு கயிறுகளைப் செய்து தருகின்றனர். இக்கயிறுகளைக் கையில் கட்டிக் கொண்டால் காத்து, அண்டாது என்று பக்தர்கள் நம்புகிறார்கள். கன்னிப் பெண்கள் திருமணம் கைகூடும் அமாவாசை தவறாமல் கோயிலுக்கு வந்து அம்மனுக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்கின் சன்னதியில் அங்கப்பிரதட்சணம் செய்யும் முறையும் காணப்படுகிறது.

மாசாணி அம்மன் வழிபாட்டில் பூக்கேட்டல், முறையிடுதல், மிளகாய் அரைத்தல், சீ எழுதிக் கட்டுதல், உதிரமாலை சாத்துதல் ஆகிய நடைமுறைகள் அதிகப்படியாக மக்கள் கடைப்பிடிக்கப்படுகிறது.

### முறையிடல்

முறையிடல் என்பது வேண்டுதல் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இதை முறையீடு என்றும் கூறுவர். முறையீடு என்பது வணிகத்திலோ, தொழிலிலோ இழப்பு ஏற்படுகின்றபோது தம்மை ஏமாற்றியவரைத் தாமே நேரில் தண்டிக்க இயலாத நிலை பாதிக்கப்பட்டவர்கள் மாசாணியம்மனிடம் முறையிடுகின்றனர். அவ்வாறு முறை வருகின்ற பக்தர்கள் 'மாசாணித் தாயே நீயே கேட்பாயாக' என்று முறையிட் செல்கின்றனர். இவ்வாறு முறையிடும் பக்தர்களுக்கு அம்மன் அருள் கிடைக்கும் என இழந்த நிலைகள் மீண்டும் கூடும் எனவும், எதிரிகள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் மக்க நம்பிக்கை கொள்கின்றனர்.

### மிளகாய் அரைத்தல்

இக்கோயிலின் சிறப்பு அம்சம், மகாசக்தி மாசாணி அம்மனை வழிபட வருகின்ற எவ பொய் கூறக்கூடாது. அம்மன் நீதிதேவதையாக விளங்குவதால் இத்திருக்கோயிலில் நீதிக்க ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பிறரால் வஞ்சிக்கப்பட்டவர்களும், சொத்துக்களைப் ப கொடுத்தவர்களும், திருட்டுப் போன்ற ஏமாற்றங்களுக்கு ஆளானவர்களும் இங்கு வந் அம்மனிடம் முறையிட்டு விட்டு கோயிலின் தென்மேற்குப் பகுதியில் போடப்பட்டுள் ஆட்டாங்கல்லில் மிளகாயைத் துவையலாக அரைத்தெடுத்து லிங்க வடிவான கல்மீ பூசிவிட்டுச் செல்வதை வழக்கத்தில் கொண்டுள்ளனர். இதன் மூலம் அவர்கள் நிவர்த் பெறுவதும், குற்றவாளிகள் மிகுந்த தண்டனைகளுக்கு ஆளாவதும் இன்றைக்கும் கூ இந்தத் தெய்வத்தின் நீதித் தன்மையை நடைமுறையில் காட்டுகிற செயல்கள விளங்குகின்றன.

### சீட்டு எழுதிக் கட்டுதல்

சீட்டு எழுதிக் கட்டுதல் என்பது தனது குடும்பத்தில் உள்ள துன்பங்கள், குறைக ஆகியவற்றை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி அந்தத் தாளைச் சுருட்டி மஞ்சள் நூலினா கட்டி அம்மனின் கைகளில் செவ்வாய், வெள்ளி, அமாவாசை போன்ற நாட்களி பூசாரியிடம் கொடுத்துக் கட்டிச் செல்வர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அந் சீட்டுக்களை இரகசியமாக நெருப்பில் இட்டு எரித்து விடுகின்றனர். இந்தச் சீட்டு எழுதி கட்டுதல் என்ற ஒரு முறையீடு இக்கோயிலில் பெருவழக்காக இருந்து வருகின்றது.

**பூக்கேட்டல்**

பக்தர்கள் தாங்கள் நினைத்த காரியம் நிறைவேறுமா? நிறைவேறாதா? என்பதைப் பூக்கேட்டல் மூலம் தெரிந்து கொள்கின்றனர். வெள்ளை அரளி, சிகப்பு அரளி, மல்லிகை, நந்தியாவட்டை போன்ற மலர்களைப் பூக்கேட்பதற்குப் பயன்படுத்துகின்றனர். ஒரு செயல் வெற்றியாக முடிய வேண்டும் என்றால் வெள்ளைப் பூவும், அது நடைபெறாது என்றால் சிகப்புப் பூவும் கிடைக்கும். இம்முறையே பூக்கேட்டல் எனப்படுகிறது. இம்முறை காலந்தோறும் தொன்று தொட்டு நிலவி வருகிறது.

**உதிரமாலை சாத்துதல்**

மாசாணியம்மன் பெண்களின் காவல் தெய்வமாகத் திகழ்வதால் தீவிர வயிற்றுவலி மற்றும் மாதாந்திரத் துன்பங்கள் நீங்க பச்சிலை மருந்து இக்கோயிலில் தரப்படுகிறது. இந்த மருந்தை சாப்பிட்ட பெண்கள் இதனால் பலனடைவதால் அதற்குப் பரிகாரமாக உதிரமாலை என்று சொல்லக்கூடிய சிவப்பு அரளிப் பூக்களை மாலைகளாகத் தொடுத்து அம்மனுக்கு சார்த்தி தமது நேர்த்திக் கடனைச் செலுத்துகின்றனர்.

இவ்வாறு பல்வேறு விதமான வழிபாடுகளை மக்கள் இக்கோயிலில் மேற்கொள்கின்றனர். சாதி மத வேறுபாடின்றி அனைத்து இன மக்களும் மாசாணி அம்மனை வழிபடுகின்றனர். இசுலாமிய மதத்தைச் சார்ந்த மக்கள் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டுச் செல்வது குறிப்பிடத்தக்கது. கோவை மாவட்ட மக்கள் மட்டுமின்றி மதுரை, ஈரோடு, திண்டுக்கல் மாவட்ட மக்களும் வந்து அம்மனை வணங்கிச் செல்கின்றனர். அனைத்து இன மக்களையும் இணைக்கும் இடமாக இத்திருக்கோயில் விளங்குகிறது. மேலும் கோயிலில் கருணை இல்லம் மூலம் இருபது சிறுமியர் வளர்க்கப்பட்டு வருகின்றனர். கோசாலை அமைத்து ஐந்தறிவு உயிர்களையும் பாதுகாத்து வருகின்றனர். தினமும் அன்னதானமும் நடைபெற்று வருகிறது. கோயிலில் வரும் வருமானங்களை இதுபோன்ற பல நல்ல செயல்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.